# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO. 221/2019

Deposition of Witness Lw1 Examined as Pw1 Dt. 30.06.2026

| | |
|---|---|
| Name | தேவதாஸ் |
| Husband Name | பங்காருராஜா |
| Village Name | மயிலாடுதுறை கூட்டுறவு நகர் |
| Age | 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day30.06.26.

**Accused present.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.த.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் என்ன விவரம் எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

தற்போது சமாதான மனுவில் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதுதான். அது யாருடைய வற்புறுத்தலும், தூண்டுதலும் இன்றி தன்னிசையாக நான் சமாதானம் செய்து கொள்கிறேன் என்றால் சரிதான். கடந்த 11.08.2019 ஆம் தேதி மதியம் 3.30 மணியளவில் நான் விஜயா சினிமா தியேட்டரில் மேலாளராக பணிபுரிந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் டிக்கட் கவுண்டரில் டிக்கட் தீர்ந்து விட்டதால் டிக்கட் கேட்டு தகராறு செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. அப்பொழுது நானும் என்னுடம் பணிபுரிபவர்களும் அவர்களை சத்தம் போட்டு அனுப்பி வைத்தோம். பிறகு 11.08.2019 பகல் 2.45 மணியளவில் நான் என் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக என் இருச்சக்கர மோட்டார் சைக்கிளில் பட்டமங்கலம் தெரு வழியாக சென்ற போது அருண்பிரியா மருத்துவமனை அருகே நின்றுகொண்டிருந்த முத்தழகு , கட்டப்பொம்மன் ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை வழிமறித்து குச்சிக்காரி மகனே டிக்கட் கேட்டால் தரமாட்டையா தேவுடியா மகனே என்று அசிங்கமாக திட்டி முத்தழகு என்பவர் அவர் கையில் வைத்திருந்த சோடா பாட்டிலால் என் பின் மண்டையில் அடித்தார் என்றால் சரியல்ல. கட்டபொம்மன் என்பவர் அவர் கையில் வைத்திருந்த சோடா பாட்டிலின் பின் புறத்தால் என் முகத்தில் இரண்டு இடத்தில் குத்தினார் என்றால் சரியல்ல. நான் சத்தம் போடவே அங்கிருந்தவர்கள் அவர்களை பிடிக்க ஓடிவருவதைப் பார்த்து முத்தழகு அவர் கையில் வைத்திருந்த சோடாபாட்டிலைக் காட்டி உன்னை கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விட்டார் என்றால் சரியல்ல. பின்பு தலையில் ஏற்ப்பட்ட இரத்த காயமும் முகத்தில் வீக்கமும் ஏற்பட்டதால் மயிலாடுதுறை அரசு மருத்துவனைமயில் அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருக்கும் பொழுது போலிசாரிடம் புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு போலிசார் விசாரணையில் மேற்கண்ட சங்கதிகளை கூறிவிட்டு தற்பொழுது ஆஜர் எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி உண்மை சம்பவத்தை மறைத்து அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

B. Devadas

30/6/26